1984 மார்ச் 22] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இதுவரையில் செய்தி கிடைத்திருக்கிறது. மேலும் இந்த மருத்துவத்துறை அறிக்கையும், இரசாயனப் பரிசோதனையின் அறிக்கையும் வந்ததற்குப் பிறகு, உள்ளபடியே தக்க நடவடிக்கை எடுப்பதற்கு காவல்துறையினர் ஆயத்தமாக இருக்கிறார்கள். இப்போது அவருடைய தந்தையின்மீதே சந்தேகப்படக்கூடிய அளவிற்கு, அவருடைய தாக்குதலினால்தான் இறந்திருக்கக் கூடுமோ என்பதும், இந்த விஷம் அருந்தியதினுடைய தன்மைகள் எல்லாம் வந்தற்குப் பிறகு முழு புலன் விசாரணை முடிர்ந்த பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே இதுபற்றி மேலும் விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

அறிக்கை அளித்தல்

விதி 107ன் கீழ் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12—3—1984 அன்று தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையில், உடுக்குறியிட்ட எண். 273,—பழைய எண். 18626—தொடர்பாக நடைபெற்ற விவாதத்தின் போது உறுப்பினர் திரு. மா. வின்செண்ட் அவர்கள் கீழ்க்கண்டவாறு வினாக்களைக் கேட்டிருந்தார்.

விவர அறிக்கையிலே இரண்டாம் நிலையில், படகுத்துறை, சிற்றுண்டிசாலை மாற்றுப்பாதை ஒழுங்குப்படுத்துவது போன்றவைகளுக்காக ரூ. 108 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, 141 இலட்சம் செலவிடப்பட்டு இருக்கிறது. படகுத்துறை இப்போது சென்னையில் நடைபெறுகிறதா ? அதிலே யார் யார் பயணம் செய்கிறார்கள் ? இந்தியர்கள் அதிகமாகப் பயணம் செய்கிறார்களா ? வெளிநாட்டவர்கள் அதிகமாகப் பயணம் செய்கிறார்களா ? இதிலிருந்து அரசுக்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி எவ்வளவு ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படகுத்துறைகள் எல்லாம் ஒன்றும் இப்போது செயல்படவில்லை. எனவே மற்ற கேள்விகளுக்கு இடம் இல்லை. நாம் இப்போது முக்கியமாகச்

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[திரு. எஸ். இராகவானந்தம்] [1984 மார்ச் 22

செய்ய வேண்டியது, கூவத்தில் நாற்றம் அடிக்காமல் இருப்ப தற்கு முகத்துவாரத்தில் மண்மேடிட்டுக்கொண்டு, கூவத்தின் தண்ணீர் கடலில் கலக்காமல், செய்வதற்கு அந்த மண்ணை எடுப்பதற்கு இப்போது தேவையானதைச் செய்துவிட்டால் பிறகு கூவத்திலே மற்ற இடங்களில் கலக்கிற சாக்கடை தண்ணீரை தடுத்து விட்டாலும், மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபடி படகுகள் போகலாம், என்னென்ன செய்திருக்கிறோம் என்று முதல் பக்கத்தில் கொடுத்திருக்கிறோம். எனவே, படகுகள் இப்போது விடுவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை'' என்பதற் குப் பதிலாக கீழ்க்கண்ட பதிலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் :—

"மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் முகத்துவாரத்தில் அமைந்துள்ள படகுத் துறையை, திருவாளர் கள் சுந்தரம், சுல்தான் ஜின்னா என்பவர்களுக்கு 15–11–1981 முதல் 14–1–1986 வரை 5 வருடங்களுக்கு குத்தகைக்கு 12 படகு களை விட அனுமதிக்கப்பட்டுள்ளது. வருஷத்திற்கு 4,920 ரூபாயை குத்தகைத் தொகையாகச் செலுத்தி வருகிறார்கள். கூவம் முகத்துவாரத்தில் தொடர்ந்து நீர் தேங்கியிருப்பதால் துர்நாற்றம் வீசுவதால், இந்தப் படகுப் பயணத்திற்கு போதிய ஆதரவு இல்லை. மற்றவைகளைப் பற்றி தகவல் இல்லை.''

Thiru K. S. G. HAJA SHAREEF: Sir, I would like to know from the Hon. Minister why the gushing of sea water into the Cooum water has been discontinuer?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் விளக்கம் கேட் கிறார்கள்? கூவம் தண்ணீர் கடலில் கலப்பதற்கு சரியாக நடவடிக்கை எடுக்கவில்லையா என்று கேட்கிறார்.......

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, விதி 107-ன்கீழ் நான் விவரங்களை அளித் தேன். இதிலே சப்ளிமெண்டரி கேட்பதற்கு இருக்கிறதா என்று தெரியவில்லை?.......

Thiru K. S. G. HAJA SHAREEF: Mr. Speaker, I only put this question arising over the reply the Hon. Minister has given. I just wanted to know why the gushing of sea water inside the Cooum has been discontinued and since when it is being discontinued?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருக்குக் கேட்க உரிமை இருக்கிறது. விளக்கம் இருந்தால் சொல்லுங்கள். இல்லையென்றால் தனிக் கேள்வி போடச் சொல்லுங்கள்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 22]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேயிருக்கக்கூடிய ஒரு டிரட்ஜர் போதாது என்று சொல்லி, மேலும் ஒரு டிரட்ஜர் வாங்குவதற்காக இருக்கிறோம். அந்த டிரஜ்ஜரை வாங்கிவிட்டால் கூடுமானவரையில், அந்தத் தண்ணீர் போவதற்கு ஏற்பாடு செய்ய வசதியாக இருக்கும்.

Thiru K. S. G. HAJA SHAREEF: Mr. Speaker, dredging has nothing to do. This is gushing of sea water inside the Cooum water. We have already taken up a decision and there has been a lot of machineries put in there. I think the High Power Generator has already been kept and it was doing the work of gushing water inside the Cooum water. Why it has been discontinued and when it has been discontinued ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதற்கு தனிக் கேள்வி போட்டால் விவரமான பதில் தருகிறேன்.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) தமிழ் நாட்டின் தென் பகுதிகளில் காலரா நோய் பரவி வருவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். வரதராஜன், என். பழனிவேல், டி. மணி, ரா. உமாநாத், இரா. தாமரைக்கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே ''தமிழ் நாட்டில் தென்பகுதிகளில் குறிப்பாக திண்டுக்கல் நகரிலும் அதனை ஒட்டியுள்ள கிராமங்களிலும் காலரா நோய் பரவியுள்ளதால் மக்கள் மத்தியில் நிலவும் கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.